கூடுதல் வினாக்கள்

I சரியான விடையைத் தேர்ந்தெடு :–

அ. கீழ்க்கண்ட வினாக்களுக்கு சரியான விடையை தேர்ந்தெடு:-

1. சில அமைப்புகள் இலாபம் ஈட்டும் நோக்கத்திற்காக அல்லாமல் பொதுமக்களுக்கு சேவை செய்யும் நோக்கத்திற்காக தொடங்கப்பட்டுள்ளன.

அ) கூட்டுப்பங்கு நிறுமம் ஆ) பன்னாட்டு நிறுமம் இ) இலாப நோக்கமற்ற அமைப்பு
ஈ) இவற்றில் எதுமில்லை

2. ரொக்கம் சாராத நடவடிக்கைகளான தேய்மானம், கொடுக்கப்பட வேண்டிய செலவுகள் மற்றும் பெற வேண்டிய வருமானங்கள் ஆகியவை எந்த கணக்கில் இடம் பெறுவதில்லை ?

அ) வியாபாரக் கணக்கு ஆ) இலாப நட்டக் கணக்கு இ) இருப்புநிலைக்குறிப்பு
ஈ) பெறுதல் மற்றும் செலுத்தல்கள் கணக்கு

3. இலாப நோக்கமற்ற அமைப்புகளின் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது வருவாயின நடவடிக்கைகள் எந்தக் கணக்கில் பதியப்பட வேண்டும்

அ) பெறுதல் மற்றும் செலுத்தல்கள் கணக்கு ஆ) வருவாய் மற்றும் செலவினக்கணக்கு
இ) இருப்புநிலைக்குறிப்பு ஈ) கடனாளிகள் கணக்கு

4. இலாப நோக்கமற்ற அமைப்புகளில் இறுதிக் கணக்குகள் தயாரிக்கும் போது முதலின நடவடிக்கைகள் எந்தக் கணக்கில் பதியப்பட்ட வேண்டும்.

அ) பெறுதல் மற்றும் செலுத்தல்கள் கணக்கு ஆ) வருவாய் மற்றும் செலவினக்கணக்கு
இ) இருப்புநிலைக்குறிப்பு ஈ) கடனீந்தோர் கணக்கு

5. வருவாய் மற்றும் செலவினக் கணக்கு என்பது இலாப நோக்கற்ற அமைப்புகளின் கணக்காண்டில் எப்போழுது தயாரிக்கப்படுகிறது.

அ) தொடக்கத்தில் ஆ) மத்தியில் இ) இறுதியில் ஈ) இவற்றில் எதுமில்லை

6. கீழ்க்கண்டவற்றுள் எது முதலின செலவுக்கு எடுத்துக்காட்டு

அ) அறக்கொடை ஆ) விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது இ) முதலீடு மீதான வட்டி
ஈ) உயில், கொடை

7. கீழ்க்கண்டவற்றுள் எது வருவாயின செலவுக்கு எடுத்துக்காட்டு

அ) மதிப்பூதியம் ஆ) உயில்கொடை இ) சந்தா ஈ) பரிசு நிதி

8. பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு என்பது ஒரு இலாய நோக்கற்ற அமைப்பின் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியில் தயாரிக்கப்படும்___________நடவடிக்கைகளின் தொகுப்பாகும்.

அ) கடனீந்தோர் மற்றும் கடனாளிகள் ஆ) செலுத்தற்குரிய மற்றும் சீட்டுடன்

இ) ரொக்கம் மற்றும் வங்கி ஈ) செலவுகள் மற்றும் வருமானங்கள்

ஆ. கீழ்க்கண்ட வினாக்களுக்குரிய கோடிட்ட இடங்களை நிரப்புக :-

9. _______நோக்கம் இல்லாமல் செயல்படும் அமைப்புகளே இலாப நோக்கற்ற அமைப்புகள் எனப்படும்.

அ) இலாப ஆ) சேவை இ) நட்ட ஈ) எந்த வித

10. _______முக்கிய வருமான ஆதாரம் உறுப்பினர் சந்தா, நன்கொடைகள், மானியம், மற்றும் உயில்கொடை போன்றவைகளை உள்ளடக்கியதாகும்.

அ) வியாபார அமைப்புகளின் ஆ) இலாப நோக்கற்ற அமைப்புகளின்

இ) தொழில் அமைப்புகளின் ஈ) கூட்டுறவு அமைப்புகளின்

11. இலாப நோக்கற்ற அமைப்புகளின் பொதுவாக சந்தா தொகையை உறுப்பினர்களிடமிருந்து_________வசூலிக்கின்றன.

அ) ஐந்தாண்டுகளில் ஆ) பத்தாண்டுகளில் இ) இரண்டாண்டுகளில் ஈ) பருவந்தோறும்

12. முதலீடுகளிலிருந்து பெறப்படும் வட்டி ஒரு_________ஆகும்.

அ) முதலினச் செலவு ஆ) முதலின வரவு இ) வருவாயின செலவு ஈ) வருவாயின வரவு

13. ஆயுள் உறுப்பினர் கட்டணம்______________எடுத்துக்காட்டு

அ) முதலினச் செலவு ஆ) முதலின வரவு இ) வருவாயின செலவு ஈ) வருவாயின வரவு

இ. பட்டியல் I–ல் உள்ளவற்றை பட்டியல் II உடன் பொருத்திப் பார்த்து, கீழே கொடுக்கப் பட்டுள்ள தொகுப்பிலிருந்து உங்கள் விடையை தேர்வு செய்க :-

14. பட்டியல் I — பட்டியல் II

(i) முதலினச் செலவு – 1. தணிக்கை கட்டணம்

(II) முதலின வரவு – 2. நிலை வைப்பு மீதான வட்டி

(iii) வருவாயின செலவு – 3. விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது

(iv) வருவாயின வரவு – 4. பரிசு நிதி

தொகுப்பு

	(i)	(II)	(iii)	(iv)
அ)	3	4	1	2
ஆ)	3	2	4	1
இ)	4	2	3	1
ஈ)	1	2	3	4

15. பட்டியல் I — பட்டியல் I

(i) நூலகத்திற்காக புத்தங்கள் வாங்கியது – 1. வருவாயின செலவ

(ii) தணிக்கை கட்டணம் – 2. முதலினச் செலவு

(III) சிறப்பு நிதி – 3. வருவாயின வரவு

(iv) பழைய செய்தித்தாள்கள் விற்றது – 4. முதலின வரவு

தொகுப்பு

	(i)	(II)	(iii)	(iv)
அ)	2	3	1	4
ஆ)	3	1	4	2
இ)	4	2	3	1
ஈ)	2	1	4	3

ஈ. கீழ்க்கண்ட கூற்று (A) மற்றும் காரணம் (R) ஆகியவற்றை பொருத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும் :–

16. கீழ்க்கண்ட வாக்கியங்களை கருத்தில் கொள்க

கூற்று (A) :– இலாப நோக்கம் இல்லாமல் செயல்படும் அமைப்புகளே இலாப நோக்கற்ற அமைப்புகள் எனப்படும்.

காரணம் (R) :– இலாப நோக்கற்ற அமைப்புகளின் முக்கிய நோக்கம் ஒரு குறிப்பிட்ட குழுவிற்கோ அல்லது பெரும்பாலான பொது மக்களுக்கோ சேவை செய்வதாகும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

அ) (A)மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.

ஆ) (A)மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல .

இ) (A) சரி ஆனால் (R) தவறு

ஈ) (A) தவறு ஆனால் (R) சரி

17. கீழ்க்கண்ட வாக்கியங்களை கருத்தில் கொள்க?

கூற்று (A) :– வருவாய் மற்றும் செலவினக் கணக்கு இலாப நட்டக் கணக்கு தயாரிப்பது போன்றதாகும்.

காரணம் (R) :– இந்த கணக்கில் வருமானங்கள் வரவுப் பக்கத்திலும் காண்பிக்கப்படும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்

அ) (A)மற்றும் (R) சரி இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கம்.

ஆ) (A)மற்றும் (R) இரண்டும் சரி மேலும் (R) என்பது (A) விற்கு சரியான விளக்கமல்ல .

இ) (A) சரி ஆனால் (R) தவறு

ஈ) (A) தவறு ஆனால் (R) சரி

உ.. சரியான கூற்றை தேர்ந்தெடு

18. சரியான கூற்றை கண்டறிக

(i) இலாப நோக்கம் இல்லாமல் செயல்படும் அமைப்புகளே இலாப நோக்கற்ற அமைப்புகள் எனப்படும்.
(ii) அவற்றின் முக்கிய நோக்கம் ஒரு குறிப்பிட்ட குழுவிற்கோ அல்லது பெரும்பாலான பொது மக்களுக்கோ சேவை செய்வதாகும்.
(iii) பொதுவாக அவை வணிகம் மற்றும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

அ) (i) மட்டும் சரி ஆ) (ii) மட்டும் சரி இ) (i) மற்றும் (ii) சரி ஈ) (i) மற்றும் (iii) சரி

ஊ. கீழ்கண்டவற்றில் சரியாக பொருந்துவதை தேர்ந்தெடு:–

19. **கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருந்துகிறது ?**

அ) விளையாட்டு உபகரணங்கள் வாங்கியது – வருவாயினச் செலவு
ஆ) அச்சு மற்றும் எழுதுபொருள் – வருவாயினச் செலவு
இ) குறிப்பிட்ட நன்கொடை – முதலினச் செலவு
ஈ) முதலீடு மீதான வட்டி – முதலின வரவு

எ. கீழ்கண்டவற்றில் சரியாக பொருந்தாததை தேர்ந்தெடு:–

20. கீழ்க்கண்டவற்றுள் எது சரியாக பொருந்தவில்லை?

அ) சந்தா – வருவாயின வரவு ஆ) உயில்கொடை – முதலின வரவு
இ) தணிக்கை கட்டணம் – முதலினச் செலவு ஈ) மதிப்பூதியம் – வருவாயினச் செலவு

விடைகள்

1– இ	2– ஈ	3–ஆ	4–இ	5–இ	6–ஆ	7–அ	8–இ	9–அ	10–ஆ
11–ஈ	12–ஈ	13–ஆ	14–இ	15–ஈ	16–ஆ	17–இ	18–ஆ	19–அ	20–இ

மிகக் குறுகிய வினாக்கள்

1. சந்தா – சிறு குறிப்பு வரைக

இலாப நோக்கற்ற அமைப்புகள் பொதுவாக சந்தா தொகையை உறுப்பினர்களிடமிருந்து பருவந்தோறும் வசூலிக்கின்றன. இவை மாதம் தோறும் காலாண்டு தோறும் அரையாண்டு தோறும் அல்லது ஆண்டுக்கு ஒரு முறை வசூலிக்கப்படுலாம். சந்தா வருவாயின வரவாகும்.

குறுகிய வினாக்கள்

2. இலாப நோக்கமற்ற அமைப்புகளின் இயல்புகள் யாவை?

(i) இலாப நோக்கம் இல்லாமல் செயல்படும் அமைப்புகளே இலாப நோக்கமற்ற அமைப்புகள் ஆகும
(ii) அவற்றின் முக்கிய நோக்கம் ஒரு குறிப்பிட்ட குழுவிற்கோ அல்லது பெரும்பாலான பொதுமக்களுக்கோ சேவை செய்வதாகும்.
(iii) பொதுவாக அவை வணிகம் மற்றும் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வதில்லை
(iv) இவைகளின் முக்கிய வருமான ஆதாரம் உறுப்பினர் சந்தா நன்கொடைகள் மானியம் மற்றும் உயில்கொடை போன்றவைகளை உள்ளடக்கியதாகும்

3. இலாப நோக்கற்ற அமைப்புகள் எத்தகைய இறுதிக் கணக்கை தயாரிக்கின்றது?

(i) பெறுதல் மற்றும் செலுத்தல்கள் கணக்கு

(ii) வருவாய் மற்றும் செலவினக் கணக்கு

(iii) இருப்புநிலைக்குறிப்பு

4. முதலின செலவிற்கும் வருவாயின செலவிற்கும் எடுத்துக்காட்டு தருக.

முதலின செலவுகள்	வருவாயின செலவுகள்
விளையாட்டு உபகரணம் வாங்கியது **நூலகத்திற்கு புத்தகம் வாங்கியது**	**அறக்கொடை** **தணிக்கை கட்டணம்** **அச்சு மற்றும் எழுதுபொருள்** **அஞ்சல் கட்டணம்** **மதிப் ஊதியம்**

பயிற்சி வினாக்கள்

1. பின்வரும் விவரங்களிலிருந்து 31.மார்ச் 2002 ம் ஆண்டுக்குரிய பெறுதல் செலுத்தல் கணக்கை தயாரிக்க

விவரம்	தொகை ₹	விவரம்	தொகை ₹
நன்கொடை	10,000	வாடகை	12,000
நுழைவுக்கட்டணம்	15,000	அச்சு எழுதுபொருள்	5,000
கட்டிடம் விற்றது	25,000	முதலீடுகள் வாங்கியது	20,000
இதர செலவுகள்	2,000		

தீர்வு –

2012 மார்ச் 31 ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் செலவினக் கணக்கு

பெறுதல்கள்	தொகை ₹	செலுத்தல்கள்	தொகை ₹
நன்கொடை	10,000	வாடகை	12,000
நுழைவுக்கட்டணம்	15,000	அச்சு எழுதுபொருள்	5,000
கட்டிடம் விற்றது	25,000	முதலீடுகள் வாங்கியது	20,000
		இதர செலவுகள்	2,000
		இருப்பு கீ/இ **ரொக்கம்**	11,000
	50,000		50,000

2. கீழே கொடுக்கப்பட்ட தகவல்களிலிருந்து கடலூர் கபடி மன்றத்தின் மன்றத்தின் 2015, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கைத் தயார் செய்யவும்.

விவரம்	`	`	**விவரம்**	`
தொடக்க ரொக்கம்		1,000	வாடகை செலுத்தியது	3,000
தொடக்க வங்கி		7,200	விளையாட்டு உபகரணம்	
சந்தா பெற்றது :			வாங்கியது	4800
2013–14			மைதான பராமரிப்பு செலவு	2,000
2014–15	500		சம்பளம்	2,500
2015–16	7,600		அறைகலன் வாங்கியது	1,500
	900	9,000	அலுவலக செலவு	1,200
நுழைவுக்கட்டணம்		1,000		
பழைய விளையாட்டு பொருள்			இருப்பு கீ/இ	
விற்றது		2,200	**ரொக்கம்**	400
நன்கொடைகள்		4,600		
போட்டி கட்டணம்		2,400		
இதர செலவுகள்		600		

தீர்வு –

கடலூர் கபடி மன்றத்தின்
2019 மார்ச 31 ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல் செலுத்தல் கணக்கு

பெறுதல்கள்	**தொகை ₹**	**தொகை ₹`**	**செலுத்தல்கள்**	**தொகை ₹**	**தொகை ₹**
இருப்பு கீ/கொ-					
ரொக்கம்	1,000		வாடகை செலுத்தியது		3,000
வங்கி	7,200	8,200	விளையாட்டு உபகரணம்		
			வாங்கியது		4800
சந்தா பெற்றது :			இதர செலவுகள்		600
2013–14	500		மைதான பராமரிப்பு செலவு		2,000
2014–15	7,600		சம்பளம்		2,500
2015–16	900		போட்டி கட்டணம்		2,400
		9,000	அலுவலக செலவு		1,200
நுழைவுக்கட்டணம்		1,000			
பழைய விளையாட்டு பொருள்			இருப்பு கீ/இ		
விற்றது		2,200	**ரொக்கம்**	600	
நன்கொடைகள்		4,600	**வங்கி**	6,600	
					7,000
		25,000			25,000

3. கீழ்க்காணும் திருச்சி மனமகிழ் சங்கத்தின் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கிலிருந்து 2018, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கைத் தயார் செய்யவும்

பெறுதல்கள்	தொகை ₹	செலுத்தல்கள்	தொகை ₹
தொடக்க இருப்பு:– கைரொக்கம்	3,200	சம்பளம்	1,500
சந்தா	22,500	வாடகை	800
நுழைவுக் கட்டணம்	1,250	மின்சார கட்டணம்	3,500
நன்கொடை	2,500	வரிகள்	1,700
அறை வாடகை	750	அச்சு மற்றும் எழுதுபொருள்	380
முதலீடுகள் விற்பனை	3,000	இதர செலவுகள்	920
		புத்தகம் வாங்கியது	7,500
		அரசு பத்திரம் வாங்கியது	10,000
		முதலீடுகள் செய்தது	3,000
		இருப்பு கீ/இ :–	
		கைரொக்கம்	400
		வங்கி	1,500
	33,200		33,200

தீர்வு –

திருச்சி மனமகிழ் சங்கத்தின்
2019 மார்ச் 31 ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் செலவினக் கணக்கு

செலவுகள்	தொகை ₹	தொகை ₹	வருவாய்கள்	தொகை ₹	தொகை ₹
சம்பளம்		1,500	சந்தா		22,500
வாடகை		800	நுழைவுக் கட்டணம்		1,250
மின்சார கட்டணம்		3,500	நன்கொடை		2,500
வரிகள்		1,700	அறை வாடகை		750
அச்சு மற்றும் எழுதுபொருள்		380			
இதர செலவுகள்		920			
உபரி		18,200			
		27,000			27,000

Padasalai TrbTnpsc

4. பின்வரும் விவரங்கள் சேலம் மகளிர் பண்பாட்டு மன்றத்தின் இறுதிக் கணக்குகளில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.

1.4.2005 அன்று விளையாட்டுப் பொருள்கள் இருப்பு 6,000

அவ்வாண்டில் வாங்கிய விளையாட்டுப் பொருள்கள் `4,000

31.3.2005 அன்று விளையாட்டுப் பொருள்கள் இருப்பு `1,000

தீர்வு –

சேலம் மகளிர் பண்பாட்டு மன்றத்தின்
2019 டிசம்பர் 31 ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் செலவினக் கணக்கு

செலவுகள்	தொகை ₹	தொகை ₹	வருவாய்கள்	தொகை ₹	தொகை ₹
தொடக்க இருப்பு	6,000				
கூட்டுக – நடப்பாண்டில் வாங்கியது	4,000				
	10,000				
கழிக்க – இறுதி இருப்பு	1,000				
		90,00			

5. பின்வரும் விவரங்கள் 2017, மார்ச் 31 ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் எவ்வாறு தோன்றும் எனக் காட்டவும்.
2017 ஆம் ஆண்டில் சந்தா பெற்றது ` 5,000. இதில் 2016 ஆம் ஆண்டிற்குரிய சந்தா `500 மற்றும் 2018 ஆம் ஆண்டிற்குரிய சந்தா 700 உள்ளடங்கியுள்ளது. 2017 ஆம் ஆண்டில் பெறவேண்டிய சந்தா `600. 2016 ஆம் ஆண்டில் முன்கூட்டிப்பெற்ற 2017 ஆம் ஆண்டிற்குரிய சந்தா `4,000.

தீர்வு –

2018 டிசம்பர் 31 ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் செலவினக் கணக்கு

செலவுகள்	தொகை ₹	தொகை ₹	வருவாய்கள்	தொகை ₹	தொகை ₹
			2017ம் ஆண்டு சந்தா	5,000	
			கூட்டுக– 2017 ம் ஆண்டு பெற வேண்டிய சந்தா	500	
				5,500	
			கூட்டுக – 2016ல் 2018 சந்தா முன்கூட்டி பெற்றது	400	
				5,100	
			கழிக்க – 2016 ம் ஆண்டு சந்தா	500	
				4,600	
			கழிக்க – 2018 ம் ஆண்டு சந்தா முன்கூட்டி பெற்றது	500	
					4100

6. விருதுநகர் மாமன்றதின் 2018 மார்ச் 31ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்கான பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு பின்வருமாறு.

மதுரை இலக்கிய மன்றம்

ப 2018 மார்ச் 31 ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு வ

பெறுதல்கள்	தொகை ₹``	தொகை ₹``	செலுத்தல்கள்``	தொகை ₹``	தொகை ₹``
இருப்பு கீ/கொ			மைதான பராமரிப்பு		33,000
ரொக்கம்	1,000		விளையாட்டுப் போட்டிச்		
வங்கி	14,000	15,000	செலவுகள்		38,000
சந்தா (2016 –17 ஆம்			பல்வகைச் செலவுகள்		22,000
ஆண்டிற்கான ₹`8000			அறைகலன்		40,000
உட்பட)		60,000	**இருப்பு கீ/இ :–**		
உயில்கொடை		18,000	கைரொக்கம்	3,000	
அரங்க வாடகை		20,000	வங்கி	22,000	
விளையாட்டு போட்டி நிதி					25,000
வரவுகள்		45,000			
		1,58,000			1,58,000

கூடுதல் தகவல்கள்

2017 ஏப்ரல் 1 அன்று மன்றத்தின் முதலீடு ₹`80,000 ஆக இருந்தது. மன்றத்தின் விளையாட்டுப் போட்டி நிதிக் கணக்கின் வரவிருப்பில் ₹`60,000 இருந்தது. 2018 மார்ச் 31 ல் பெற வேண்டிய சந்தா ₹`8,000. மற்றும் 2018 மார்ச் 31 அன்று பெற வேண்டிய சந்தா ₹`9,000 இறுதிக் கணக்குகளைத் தயார் செய்யவும்

தீர்வு –

விருதுநகர் மாமன்றத்தின்
2017 மார்ச் 31 ம் நாளோடு முடிவடையும் நாளுக்குரிய இருப்புநிலைக்குறிப்பு

பொறுப்புகள்	தொகை ₹	தொகை ₹`	சொத்துக்கள்	தொகை ₹	தொகை ₹
			முதலீடுகள்		80,000
முதல் நிதி		43,000	வங்கி இருப்பு		14,000
			பெற வேண்டிய சந்தா–		8,000
விளையாட்டுப் போட்டி நிதி		60,000	ரொக்கம்		1,000
		1,03,000			1,03,000

விருதுநகர் மாமன்றத்தின்
2018 மார்ச் 31 ம் நாளோடு முடிவடையும் ஆண்டுக்குரிய வருவாய் செலவினக் கணக்கு

செலவுகள்	தொகை ₹	தொகை ₹`	வருவாய்கள்	தொகை ₹	தொகை ₹
மைதான பராமரிப்பு		33,000	சந்தா	60,000	
பல்வகைச் செலவுகள்		22,000	கழிக்க – 16–17 ம் ஆண்டு சந்தா	8,000	
உபரி		26,000		52,000	
			கூட்டுக – நடப்பாண்டு பெற வேண்டிய சந்தா	9,000	61,000
			அரங்க வாடகை		10,000
		81,000			81,000

விருதுநகர் மாமன்றத்தின்
2018 மார்ச் 31 ம் நாளோடு முடிவடையும் நாளுக்குரிய இருப்புநிலைக்குறிப்பு

பொறுப்புகள்	தொகை ₹	தொகை ₹`	சொத்துக்கள்	தொகை ₹	தொகை ₹
முதல் நிதி	43,000		முதலீடுகள்		80,000
கூட்டுக– உபரி	26,000	69,000	வங்கி இருப்பு		22,000
			பெற வேண்டிய சந்தா–		9,000
			ரொக்கம்		3,000
விளையாட்டுப் போட்டி நிதி	60,000		அறைகலன்		40,000
கூட்டுக – விளையாடடுப் போட்டி நிதி வரவுகள்	45,000				
	1,05,000				
கழிக்க – விளையாட்டுப் போட்டி நித செலவுகள்	38,000	67,000			
உயில் கொடை		18,000			
		1,54,000			1,54,000

கோ. பிரகாஷ் M.com. M.Phil. B.ed. D.Ted

முதுகலை வணிகவியல் ஆசிரியர்

குகை மேல்நிலைப் பள்ளி (ஆண்கள்)

சேலம் - 636006

தொடர்புக்கு - **+91-94882-70034**